# தொழிற்கல்விக்கு முன்பான கல்வி- என்றால் அது என்ன?

தொழிற்கல்விக்கு முன்பான கல்வி ஒரு 1-வருட இணைப்புப்பால வசதியாகும், இதன்மூலம் நீங்கள் செய்முறையிலும் பாடசாலையிலும் ஒரு அடிப்படைத் தொழிற்கல்விக்குச் செல்வதற்கு உங்களைத் தயார்படுத்துவதாகும்.

நீங்கள் 3,5க்கும் 4 நாட்களுக்கும் இடையாக ஒரு நிறுவனத்தில் வேலைசெய்வதுடன் 1-1,5 நாட்கள் தொழிற்கல்லூரிக்கு செல்வீர்கள். நிறுவனத்தில் வேலைசெய்வதற்கு நீங்கள் ஊதியம் பெறுவீர்கள். துறைசார் தொழிற்கல்லூரிக்கு நீங்கள் பொருட்களுக்கான செலவுகளை மட்டும் செலுத்தவேண்டும். அத்துடன் கல்லூரிப் பயணங்களின் செலவையும் பொறுப்பேற்க வேண்டும். ஒவ்வொரு தவணையிலும் உங்களது தகுதி குறித்து ஒரு பெறுபேற்றைப் பெறுவீர்கள்.

அல்லது நீங்கள் துறைசார் தொழிற்கல்லூரியில் தொழிற்கல்விக்கு முன்பான திட்டத்திற்குச் செல்வீர்கள், இது செய் பயிற்சி மற்றும் நிறுவனத்தில் பயில்வது சேர்ந்திருக்கும். சுவிசில் பிரெஞ்சு- மற்றும் இத்தாலிய மொழிபேசும் பகுதிகளில் இவ்வாறான தொழிற்கல்விக்கு முன்பான கல்வி மிகவும் பரந்துள்ளதுடன் டொச் பேசும் சுவிஸ் பகுதியில் இது தொழிற்கல்விக்குத் தயார்படுத்தும் வருடத்தை ஒத்ததாக உள்ளது.

## தொழிற்கல்விக்கு முன்பான கல்வி உங்களுக்குப் பொருத்தமானதா?

நீங்கள் கட்டாய பாடசாலைக்காலத்தை முடித்துவிட்டீர்கள் மற்றும்

- நீங்கள் 15-18 வயதானவர் (சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் மற்றும் சில இடங்களில் 20 வயதுவரை).
- நீங்கள் இன்னமும் தொழிலைத் தேடும் கட்டத்தில் உள்ளீர்கள் அல்லது ஏற்கனவே ஒரு தொழிலை முடிவுசெய்துள்ளீர்கள் ஆனால் இதுவரை அதற்கான இடம் கிடைக்கவில்லை.
- ஒரு அடிப்படைத் தொழிற்கல்வியை வெற்றிகரமாக செய்வதற்கு உங்களுக்கு மொழிரீதியாக அல்லது பாடசாலைக் கல்வியின் காரணமாக இன்னமும் ஒரு தயார்படுத்தும் காலம் தேவைப்படுகின்றது.
- நீங்கள் உற்சாகத்துடனும் கற்பதற்குத் தயார்நிலையிலும் இருந்தால்.
- விடயங்களை விளங்கிக்கொள்ளவும் பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் உங்களுக்கு நீங்கள் வாழும் பிரதேச மொழியில் அடிப்படை அறிவு உள்ளது.

## தொழிற்கல்விக்கு முன்பான கல்வியை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

முதலில் நீங்கள் கற்க விரும்பும் தொழிலுக்கான அடிப்படைத் தொழிற்கல்விக்கு அல்லது அந்த தொழில்பகுதிக்கு முன்பான கல்வியை வழங்கும் ஒரு நிறுவனத்தைக் கண்டுகொள்ள வேண்டும். அதன்பின் நீங்கள் உங்களுக்கு தொழிற்கல்விக்கு முன்பான கல்வியை வழங்கவிருக்கும் நிறுவனத்தை உங்களுக்குப் பொறுப்பான துறைசார் தொழிற்கல்லூரியில் பதிவுசெய்யுங்கள். அங்கு பாடசாலைக்குரிய நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை அவர்கள் தெளிவாக்குவார்கள். அதன்பின் நீங்கள் தொழிற்கல்விக்கு முன்பான கல்விக்கு அந்த நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்ளலாம்.

சில மாநிலங்களில் தொழிற்கல்விக்கு முன்பான கல்விக்கான நிறுவனத்தைத் தேடுவது தொழில் ஆலோசனை நிலையம் ஊடாக இடம்பெறுகின்றது, நீங்கள் அவர்களுடன் சேர்ந்து ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து கல்விக்கான நிறுவனத்தைத் தேடுவீர்கள். தொழில் ஆலோசனை நிலையம் உங்களுக்கு நிச்சயமாக தொழிற்கல்விக்கு முன்பான கல்விக்கான நிறுவனத்தை அல்லது தொழிற்கல்விக்கு முன்பான ஒரு கற்றலைத் தேடுவதற்கு உதவிபுரிவார்கள்.

## அனைத்துத் தொழில்களுக்கும் இந்த தொழிற்கல்விக்கு முன்பான கல்வி இயலுமானதா?

ஆம், நீங்கள் அதற்கேற்ற தொழிற்கல்விக்கு முன்பான கல்வியை வழங்கும் நிறுவனத்தை கண்டுபிடிப்பீர்களானால் இயலும்.

## தொழிற்கல்விக்கு முன்பான கல்வியின்போது நீங்கள் எவ்வளவு ஊதியத்தைப் பெறுவீர்கள்?

நீங்கள் தொழிற்கல்விக்கு முன்பான கல்வியை ஒரு நிறுவனத்தில் செய்வீர்களானால், ஒவ்வொரு துறையையும் பொறுத்து ஊதியத்தின் அளவு வித்தியாசப்படுவதுடன் தொழிற்கல்வி கற்கும் வருடங்களில் இது தங்கியிருக்கும். வழமையாக நீங்கள் தொழிற்கல்வியின் முதல் வருடத்தில் 80-90 % ஊதியத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். ஊதியத்தின் அளவு தொழிற்கல்விக்கு முன்பான கல்விக்கான ஒப்பந்தத்தில் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

முழுநேரப் பாடசாலையில் தொழிற்கல்விக்கு முன்பான கல்வித்திட்டத்தைக் கற்றால் உங்களுக்கு ஊதியம் கிடைக்காது.

## உங்களுக்கு தொழிற்கல்விக்கு முன்பான கல்வி ஒப்பந்தத்துடன் தொழிற்கல்வி ஒப்பந்தமும் சேர்ந்து இருக்குமா?

இல்லை. சிறந்தது என்னவென்றால், நீங்கள் ஏற்கனவே தொழிற்கல்விக்கு முன்பான கல்வியை ஒரு நிறுவனத்தில் செய்வீர்களானால், அதன்பின் அதே நிறுவனத்தில் தொழிற்கல்வியை செய்வதாகும். இப்படியான வேளைகளில் அந்த நிறுவனத்துடன் நீங்கள் அதற்குரிய தொழிற்கல்வி ஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டும்.

## துறைசார் தொழிற்கல்லூரியில் நீங்கள் என்ன கற்பீர்கள்?

துறைசார் தொழிற்கல்லூரி ஆவணி/புரட்டாதியில் ஆரம்பித்து அடுத்து வரும் வருட ஆனி/ஆடியில் நிறைவுபெறும். நீங்கள் வழமையாக முன்பாகக் கற்கும் கல்விக்கான வகுப்பு ஒன்றுக்கு அனுப்பப்படுவதுடன் அங்கு உங்கள் மொழியறிவின் அளவைப் பொறுத்து (ஒவ்வொரு டொச், பிரெஞ்சு அல்லது இத்தாலியப் பிரதேசங்களைப் பொறுத்து), கணிதம் மற்றும் பொதுஅறிவில் தங்கியிருக்கும். பாடசாலையில் தொழிற்கல்விக்கு முன்பான கல்வியின்போது நீங்கள் தொழிற்கல்வியைக் கற்றுப்பார்த்தல், பயிற்சிபெறல் மற்றும் தொழிற்கல்விக்கு விண்ணப்பிப்பது போன்றவைக்கு தயார்படுத்தப்படுவீர்கள்.

கற்பதில் பிரச்சினைகள் இருந்தால் ஆசிரியர்கள் உங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் உதவுவார்கள்.

## நிறுவனத்தில் நீங்கள் என்ன கற்பீர்கள்?

நிறுவனத்தில் நீங்கள் தொழில் உலகு குறித்து விபரமாகக் கற்றுக்கொள்வதுடன் நீங்கள் விரும்பும் தொழிலுக்குத் தேவைப்படும் ஆரம்ப அடிப்படை விடயங்களுக்குத் தயார்படுத்தப்படுவீர்கள். நிறுவனத்தில் உங்களுக்கு உதவுவதற்கு ஒருவர் தொடர்பு இருப்பார், அவர் உங்களை வழிநடத்தி உதவி தொழிற்பயிற்சியில் துணைபுரிவார்.

## உங்களுக்கும் விடுமுறை உள்ளதா?

ஆம், தொழிற்கல்விக்கு முன்பான கல்வியின்போது உங்களுக்கு ஐந்து வாரம் விடுமுறை உள்ளது. இதை உத்தியோகபூர்வமான பாடசாலை விடுமுறைக்காலத்தில் எடுத்துக் கொள்ளலாம். பாடசாலை விடுமுறைக்காலத்தில் வகுப்புகள் இடம்பெறாது. பாடசாலை விடுமுறைக்காலத்தில் நீங்கள் விடுமுறை எடுக்காவிட்டால், வாரத்தில் 5 நாட்கள் நிறுவனத்தில் வேலை செய்யவேண்டும்.

தொழிற்கல்விக்கு முன்பான பாடசாலைக் கல்வித்திட்டத்தின்போது உத்தியோகபூர்வமான பாடசாலை விடுமுறைக்காலத்தில் உங்களுக்கு விடுமுறை இருக்கும்.

## மேலதிக விபரங்கள்

மேலதிக விபரங்களை நீங்கள் உங்கள் மாநிலத்தில் இதற்குப் பொறுப்பு வகிக்கும் துறைசார் தொழிற்கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம், அதேவேளை அவர்களிடம் தொழிற்கல்விக்கு முன்பான கல்விக்கான ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.